முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் அருளிய இந்த நூல் வீட்டில் இருந்தால் முருகப்பெருமான் முதல் நவகோடி சித்தரிஷி கணங்களும் வீட்டில் இருப்பதாக அர்த்தமாகும். இந்த நூலை பயபக்தியுடன் படிப்பது பல நன்மைகளை தரும். இதுவரை உருவாகிய நவகோடி சித்தரிஷி கணங்களுக்கு எல்லாம் கிடைக்காத அற்புத வாய்ப்பாக முதற்சீடராம் அகத்திய மகரிஷிக்கு பிறகு நித்திய சுவடிகளை துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு ஞானத்தலைவன் முருகப்பெருமான் அருளியுள்ளார்கள்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1291

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.04.2023, புதன்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
   பரவெளிகண்ட சூட்சும குருவே
   சரவணச்சுடரேற்றி உலகோர்க்கு
   சற்குருவாய் அருளுகின்ற ஞானகுருவே
2. குரு அரங்கனே உந்தனுக்கு
   குறையில்லா ஞான அறிவுரை ஆசி
   முருகப்பெருமான் யானும் சுபகிருது சேல் திங்கள்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 29 ம் நாள், 12.04.2023, புதன்கிழமை)
   முழுமைபட அரங்கனுக்கு இன்னும் ஆற்றல்பெருக
3. பெருகவே அரங்கஞானி கேட்க தொடர்ந்துரைப்பேன்
   பிரம்ம ஞானம் உன் தொண்டர்கட்கும்
   வரமாக இனி கனிய இருக்க
   பூவுலகில் உன்னை சரணாகதி கொண்டு
4. கொண்டுமே ஐயமற மாதர்மம் தன்னை
   குறைவில்லா செய்துவரும் அன்பர்கட்கு
   தொண்டின் வழியே இந்த சூட்சும ஞானம்
   தேசிகன் உன் கரம்பட சக்தியாக வரக்கூடும்

5. கூடுகின்ற காலம் கனிந்துவர
குறைவின்றி அரங்கன் தர்மத்தில்
நாடியே பெருமளவு பொருளுதவி செய்து
நம்பிக்கை வைத்து தொடர்ந்து வந்தால்

6. வந்தவர்க்கு கந்தன் காட்சி உண்டு
வருபவர்க்கு எந்தநாளிலுமே சிந்தைதெளிவு ஞானம் கூடி
சிறப்பறிவாய் அரங்கன் அவதார சூட்சுமம்
சூட்சும சகல சூட்சுமங்களும் சுருதிபடி இலகுவாய் வெளியாகும்

7. மாட்சிமைபட எந்தவகையிலும் மிரட்சிகொள்ளா
மகா ஞானி அரங்கன் நிழலில் நாளும் வாழ்ந்து
வாழ்ந்து உலகோர் ஞானியாக
வருங்காலங்களில் ஆற்றல் பெருகக்கூடும்

8. கூடவே அற்புதத்தை நடத்தவே
குரு அரங்கனுக்கு பிரம்ம வேளையில்
நாடியே முருகன் யான் பல சூட்சுமங்கள்
ஞானமாக ஆற்றலாக மாதவபலமாக வழங்கிவருகின்றேன்

9. வருகவே அரங்கனை அனுதினம்
வணங்கி தொண்டு செய்பவர்க்கு
தர்மமோடு கூடிய மகா சக்தியாக
தவபலமும் எளிதில் என்னருளால் சித்திக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—